முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

**E.A.03/2025**

**in**

**E.P.06/2024 in O.S.No.313/1990**

சுப்பையா முதலியார் (இறப்பு) ... வாதி

சங்கரம்மாள் ... மனுதாரர்/மனுதாரர்/வாதியின் சட்டப்படியான வாரிசுதாரர்

/எதிர்/

1. கணபதி
2. ரத்தினவேல்
3. ஆறுமுகம்
4. திருமேனி
5. லட்சுமி .... எதிர்மனுதார்கள்/எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 11.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.இசக்கிமாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் நிறைவேற்றுதல் மனுவில் தோன்றாத்தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், மனு மற்றும் 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரை, வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரைகளை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 50–ன்படி, அசல் வழக்கின் வாதியான இறந்துபோன மனுதாரரின் தகப்பனார்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.12.11 17:52:10 +0530

சுப்பையா முதலியார் என்பவரின் சட்டப்படியான வாரிசு நிலைமையில் இந்த பிரதான நிறைவேற்றுதல் மனுவை மனுதாரர் ஸ்தானத்தில் மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்</u> :–

அசல் வழக்கினை மனுதாரர் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவர் எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான பரமசிவன் ஆசாரி என்பவர் மீது இதன் மனு 2ம் தபசில் சொத்தினை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தார் என்றும், இதன் மனு 2ம் தபசில் சொத்தானது மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் மற்றும் எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பரமசிவன் ஆசாரி ஆகியோர்களுக்கு மட்டும் பொதுவாக பாத்தியப்பட்ட பொது நடைபாதை என்றும், மேற்படி பொது நடைபாதை இதன் மனு 2ம் தபசில் சொத்தில் எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பரமசிவன் ஆசாரி என்பவர் அத்துமீறி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டவும், மேற்படி பொது நடைபாதையினை நோக்கி நூதனமாக கதவு, நிலை, வாசல் அமைக்கவும் எத்தனித்த காரணத்தினால் மேற்படி அசல் வழக்கு மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவரால் மேற்படி வழக்கின் பிரதிவாதியான எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பரமசிவன் ஆசாரி மீது இதன் மனு 2ம் தபசில் சொத்தானது மேற்படி வழக்கின் வாதி மற்றும் பிரதிவாதிக்கு பொதுவாக பாத்தியப்பட்டதென விளம்புகை செய்யகோரியும், அதனை அனுசரித்து மனு 2ம் தபசில் சொத்தினை மேற்படி வழக்கின் பிரதிவாதியான எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பரமசிவன் ஆசாரி அடைத்து கட்டுமானம் கட்டவோ, அல்லது நூதனமாக கதவு, நிலை வைத்து வாசல் வைக்கவோ கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் பிராது தபசில் சொத்துக்களை பார்வையிட்டு வரைபடத்துடன் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கானது முழு விசாரணைக்கு பின்பு மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் கோரியபடி இதன் மனு 2ம் தபசில் சொத்தை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி இந்நீதிமன்றத்தால் கடந்த 21.08.1995 தேதியில் தீர்ப்பும், தீர்ப்பாணையும் அளித்து தீர்ப்பளிக்கப்பட்டது என்றும், மேற்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:52:18 +0530

தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பின் மீது இந்த எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான பரமசிவன் ஆசாரி எவ்வித மேல்முறையீடும் செய்து கொள்ளவில்லை என்றும், மேற்படி அசல் வழக்கில் பிறந்த தீர்ப்பாணையும், தீர்ப்பும் இறுதியான ஒன்றாகும் என்றும், இந்த நிலைமையில் மேற்படி அசல் வழக்கில் பிறந்த தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பிற்கு பின்பு அசல் வழக்கின் வாதியான மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவர் கடந்த 05.04.2010 தேதியில் மனுதாரரை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் என்றும், மேற்படியார் காலமானவுடன், மேற்படியாரின் சட்டப்படியான ஒரே வாரிசு என்ற முறையில் அசல் வழக்கின் தபசில் சொத்துக்களான இதன் மனு தபசில் சொத்துக்களை வாரிசு முறையில் அடைந்து சர்வ சுதந்திர பாத்தியதையுடன் அனுபவித்து வருவதாகவும், மேற்படி அசல் வழக்கில் பிறந்த தீர்ப்பாணை மற்றும் தீர்ப்பிற்கு பின்பு அசல் வழக்கின் பிரதிவாதியான பரமசிவன் ஆசாரி என்பவரின் வாரிசுகளான இந்த எதிர்மனுதாரர்கள் மேற்படி அசல் வழக்கில் பிறந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு புறம்பாக மேற்படி தீர்ப்பாணைக்கு பின்பு கடந்த 2024ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்படி தீர்ப்பாணையை அவமதிப்பு செய்து பிராது 2ம் தபசில் சொத்தில் அத்துமீறி ஆக்கிரமித்து கட்டிடம் கட்டிவிட்டார்கள் என்றும், தொடர்ந்து ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்ட எத்தனித்து வருகிறார்கள் என்றும், எனவே மேற்படி எதிர்மனுதாரர்கள் மீது தீர்ப்பாணையை அவமதிப்பு செய்த வகைக்கு பிரதான நிறைவேறுதல் மனுவை அசல் வழக்கின் வாதியான இறந்துபோன மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவரின் சட்டப்படியான வாரிசு ஸ்தானத்தில் இருந்து தாக்கல் செய்வதாகவும், அவ்விதம் மனுதாரர் இந்த பிரதான நிறைவேறுதல் மனுவை அசல் வழக்கின் வாதியின் வாரிசுதாரர் நிலைமையில் தாக்கல் செய்து மேல்நடத்திக்கொள்ள இந்நீதிமன்றம் மனுதாரருக்கு அனுமதி அளிக்க வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்றும், ஆகையால், அசல் வழக்கின் வாதியான இறந்துபோன மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவரின் சட்டப்படியான வாரிசு நிலைமையில் இந்த பிரதான நிறைவேற்றுதல் மனுவை மனுதாரர் ஸ்தானத்தில் மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:52:26 +0530

**2. <u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 4, 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியாருக்கும் எதிர்மனுதாரர்களின் முன்பாத்தியஸ்தர் பரமசிவன் ஆசாரிக்கும் மனு 2வது தபசில் சொத்தினை பொறுத்து தாவா ஏற்பட்டு அதன்பேரில் சங்கரன்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மனு 2வது தபசில் சொத்தினை பொறுத்து மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியாருக்கும் எதிர்மனுதாரர்களின் முன்பாத்தியஸ்தரான பரமசிவன் ஆசாரிக்கும் தாவா ஏற்பட்டு அதன்பேரில் மேற்படி சுப்பையா முதலியார் மேற்படி பரமசிவன் ஆசாரி அவர்கள் மீது சங்கரன்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.313/1990 வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கு முழுமையான விசாரணைக்கு பின்னர் கடந்த 21.08.1995ம் தேதியன்று மனு 2வது தபசில் சொத்து மேற்படி பரமசிவன் ஆசாரிக்கும் மேற்படி சுப்பையா முதலியாருக்கும் பொதுவாக பாத்தியப்பட்டு என விளம்புகை செய்தும், அதனை அனுசரித்து கட்டுமானம் கட்டக்கூடாது என நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றும், பின்னிட்டு மேற்படி சுப்பையா முதலியார் கடந்த சில வருடங்களுக்கு முன்பு மனு 2 வது தபசில் சொத்திற்கு கிழக்கு பக்கம் மேற்படி சுப்பையா முதலியாருக்கு பாத்தியப்பட்ட ஓட்டு வீட்டினை அபிவிருத்தி செய்து காரைகட்டு குடியிருப்பு வீடு கட்டி ஆண்டனுபவம் செய்து வந்த நிலையில் மேற்படி சுப்பையா முதலியார் அவர்கள் கடந்த சுமார் 22 வருடங்களுக்கு முன்பு மரணமடைந்த பின்பு மேற்படி சுப்பையா முதலியாரின் சட்டப்படியான வாரிசான இந்த மனுதாரரும், மேற்படியாரின் கணவரான பரமசிவன் என்பவரும் மேற்படி சுப்பையா முதலியாருக்கு பாத்தியப்பட்ட மனு 2வது தபசில் சொத்திற்கும் கிழக்கு பக்கமுள்ள வீட்டினை ஆண்டனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், இந்நிலையில் மேற்படி பரமசிவன் ஆசாரி அவர்கள் கடந்த 08.09.2000ம் தேதியன்று மரணமடைந்த பின்பு மேற்படியாரின் வாரிசுகளான எதிர்மனுதாரர்கள் மற்றும் மாரியம்மாள், கோமதி, இராஜேஸ்வரி ஆகியோர்கள் மனு 2வது தபசில் சொத்திற்கு மேற்கு பக்கமுள்ள குடியிருப்பு வீட்டினை கூட்டாக ஆண்டனுபவம் செய்து வந்த நிலையில் மேற்படி 3ம் எதிர்மனுதாரருக்கு 1, 2, 4, 5 எதிர்மனுதாரர்கள் சரியான பிரதிபிரயோஜனத்தின்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:52:33 +0530

பேரில் கடந்த 18.10.2019ம் தேதியன்று மேற்படி வீட்டினை பதிவு பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்து அதன்பேரில் மேற்படி வீட்டினையும் அதோடு சேர்ந்த மனு 2வது தபசில் சொத்தினையும் இந்த 3ம் எதிர்மனுதாரர் தனித்த முறையில் இந்நாள்வரை ஆண்டனுபவம் செய்து வருகிறார் என்றும், இந்நிலையில் 3ம் எதிர்மனுதாரர் கடந்த 3 வருடங்களுக்கு முன்பு தனது சகோதரர் இரத்தினவேல் கோயம்புத்தூரில் குடியிருந்து வருவதால் அவரை காண சென்றிருந்தபோது மனுதாரரும், மேற்படி மனுதாரின் கணவர் பரமசிவன் என்பவரும் மனு 2வது தபசில் சொத்தில் ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்டிவிட்டார் என்றும், அதன்பின்னர் 3ம் எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு வந்த பின்பு மேற்படி விவரம் தெரியவரவே மனு 2வது தபசில் சொத்து பொதுவாய் பாத்தியப்பட்டது என்றும், அதில் தாங்களும் கட்டுமானம் கட்ட உரிமையில்லை என்றும், ஆகவே மேற்படி கட்டுமானங்களை அகற்றி தரவேண்டும் என கேட்டதற்கு மனுதாரரும் மேற்படியாரின் கணவரும் தவறான சங்கதிகளை கூறி வீண் காலதாமதம் செய்து வந்த நிலையில் 3ம் எதிர்மனுதாரர் மனு 2வது தபசில் சொத்தில் உள்ள கட்டுமானங்களை அகற்றி தருவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து தெருவில் உள்ள பெரியோர்களிடம் கூறியதினால் மனுதாரரும், மனுதாரரின் கணவரும் 3ம் எதிர்மனுதாரர் மீது வீண் விரோதம் கொண்டு மனு 2வது தபசில் சொத்திற்கு மேல்புறம் உள்ள வீட்டினை ஆண்டனுபவம் செய்வதினை பலவகைகளில் கடந்த 08.02.2022ம் தேதியன்று இடைஞ்சலும், இடையூறும் செய்து 3ம் எதிர்மனுதாரர் மனு 2வது தபசில் சொத்திற்கு மேல்பக்கமுள்ள குடியிருப்பு வீட்டினை அபிவிருத்தி செய்து கட்டிடம் கட்டுவதினை கடந்த 07.03.2022ம் தேதியன்று இடைஞ்சலும் இடையூறும் செய்து வருகிறார்கள் என்றும், இந்த 3ம் எதிர்மனுதாரர் மேற்படியார்களின் செய்கை குறித்து தெருவில் உள்ள பெரியோர்களிடம் கடந்த 08.03.2022ம் தேதியன்று கூறியதின் பேரில் மேற்படியார்கள் இந்த மனுதாரரையும், மேற்படியாரின் கணவரையும் அழைத்து கண்டித்து மனு 2வது தபசில் சொத்திலுள்ள கட்டுமானங்களை அப்புறப்படுத்தியும், மேற்படி வீட்டினை 3ம் எதிர்மனுதாரர் ஆண்டனுபவம் செய்வதினை எவ்வகையிலும் இடையூறு செய்யக்கூடாது என அறிவுரை கூறியும் கேட்க மார்க்கமில்லாமல் தொடர்ந்து மேற்படியார்கள் 3ம் எதிர்மனுதாரர் மேற்படி வீட்டினை ஆண்டனுபவம் செய்வதினை கடந்த 09.03.2022ம் தேதி முதல் மிகத்தீவிரமாக இடைஞ்சலும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:52:40 +0530

இடையூறும் செய்து வருகிறார்கள் என்றும், மனுதாரர் மற்றும் மனுதாரரின் கணவர் செய்கை முற்றிலும் சட்டத்திற்கு விரோதமானதாகும் என்றும், ஆகவே 3ம் எதிர்மனுதாரர் சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.84/2022 வழக்கு தாக்கல் செய்து அதில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையர் அவர்கள் நிலஅளவையர் உதவியுடன் அளந்து அத்துமால் கண்டு இந்நீதிமன்றத்தில் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்த பின்பு மனுதாரர் தனது தவறினை மறைத்தும், மேலும் மேற்படி வழக்கில் வீண் குழப்பத்தினை ஏற்படுத்தவும் மனுதாரர் மேற்படி நம்பர் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி நம்பர் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தினை நீதிமன்றம் மூலம் சான்றிடப்பட்ட நகல் பெற்று அதனை ஆதாரமாக தாக்கல் செய்தால் இந்த மனுதாரருக்கு பாதகமாக இருக்கும் என்கிற காரணத்தினால் மனுதாரர் மேற்படி நம்பர் மனுவில் சான்றாவணங்களை உற்பத்தி செய்வதற்காக வேண்டி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேலும் மேற்படி நம்பர் மனுவில் இறந்துபோன சுப்பையா முதலியாருக்கு மனுதாரர் மட்டும் வாரிசு என்பதற்கு வாரிசுதாரர் மனுவும், மேற்படி இறந்துபோன பரமசிவன் ஆசாரிக்கு எதிர்மனுதாரர்கள் மட்டுமே வாரிசுதாரர்கள் என்பதற்கு மனுவும் தாக்கல் செய்யாமல் மேற்படி நம்பர் பிரதான மனுவில் தீர்ப்பாணை பெற்றவர் மற்றும் தீர்ப்புகடனாளி ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் குறித்து எவ்விதமான தீர்மானமும் செய்யாமல் மேற்படி நம்பர் நிறைவேற்றுகை மனுவினை மனுதாரர் தாக்கல் செய்திருப்பதும், முந்தைய பிரதான வழக்கில் கோரப்படாத பரிகாரத்தினை நிறைவேற்றம் செய்யவேண்டி மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்திருப்பது சட்டப்படி சரியானது அல்ல என்றும், இவ்விதமாக இந்த நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்வதற்கு இந்த மனுதாரருக்கு எவ்விதமான சட்ட தகுதியும் கிடையாது என்றும், மேலும் எதிர்மனுதாரர்களின் முன்பாத்தியஸ்தரான பரமசிவன் ஆசாரிக்கு எதிர்மனுதாரர்கள் தவிர 3ம் எதிர்மனுதாரருடன் உடன்பிறந்த சகோதரர்களான மாரியம்மாள், கோமதி, ராஜேஸ்வரி ஆகியோர்கள் சட்டப்படியான வாரிசுகள் உள்ள நிலையில் மேற்படியார்களை இம்மனுவில் கட்சி சேர்க்காத காரணத்தினால் மேற்படி நம்பர் மனுவும் அவசிய கட்சி சேர்க்காத தோஷத்திற்கு உள்ளாகி உள்ளது என்றும், மேலும் இவ்விதமான மனு தாக்கல் செய்வதற்கு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:52:48 +0530

மனுதாரருக்கு எவ்விதமான சட்ட அந்தஸ்தும் கிடையாது என்றும், எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டுமென 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது அசல் வழக்கின் வாதியான இறந்துபோன மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவரின் சட்டப்படியான வாரிசு நிலைமையில் இந்த பிரதான நிறைவேற்றுதல் மனுவை மனுதாரர் ஸ்தானத்தில் மேல்நடத்திக்கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரரை அசல் வழக்கின் வாதியான இறந்துபோன மனுதாரரின் தகப்பனார் சுப்பையா முதலியார் என்பவரின் சட்டப்படியான வாரிசு நிலைமையில் E.P.No.06/2024 மனுவை நடத்த அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை. மேலும், காலம்சென்ற வாதிக்கு மனுதாரரை தவிர வேறு வாரிசுகள் இருப்பதாக ஆட்சேபணை எதுவும் 1, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. எனவே இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்படத்தக்கது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

7) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:52:55 +0530

8) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. தரப்பினர்கள் தங்களது செலவுத்தொகையை தாங்களே ஏற்றுக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:53:02 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.11 17:53:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ.நீ.,
சங்கரன்கோவில்,
E.A.No.03/2025
in
E.P.No.06/2024
in
O.S.No.313/1990
உத்தரவு (Draft / Fair)
நாள் : 11.12.2025